# ஆசாரியத்துவ
# மற்றும்
# துணைத் தலைவர்களின்

வழிகாட்டிப் புத்தகம்

# ஆசாரியத்துவ
# மற்றும்
# துணைத் தலைவர்களின்

வ ழி கா ட் டி ப் பு த் த க ம்

பிரசுரித்தோர்
பிற்காலப் பரிசுத்தவான்களின் இயேசு கிறிஸ்து சபை
சால்ட் லேக் சிட்டி, யூட்டா

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 1 |
| ஆசாரியத்துவம் | 4 |
| துணைக் குழுக்கள் | 11 |
| பாடத்திட்டமும் ஆசிரியர் வளர்ச்சியும் | 15 |
| தலைமை | 17 |
| சபைப் பொருட்களைப் பெறுதலும், குடும்ப வரலாற்றுக் குறிப்புக்களைக் கண்டறிதலும் | 22 |


**விநியோகம்**

*ஆசாரியத்துவ மற்றும் துணைத் தலைவர்களின் வழிகாட்டிப் புத்தகம்*, சபைக்கு புதியவர்களுக்கும், குறைவான சபை அனுபவம் உள்ள ஆசாரியத்துவ மற்றும் துணைக்குழு தலைவர்களுக்குமானது. அதிகம் ஸ்தாபிக்கப்பட்ட பகுதிகளிலும் தலைவர்களுக்கு இது உபயோகமானதாக இருக்கும். இது ஆசாரியத்துவ மற்றும் துணைத்தலைவர்கள் தங்கள் அழைப்புகளை நிறைவேற்ற உதவுவதற்கான கொள்கைகளையும் நடைமுறைகளையும் விளக்குகிறது.


© 2003 by Intellectual Reserve, Inc.
எல்லா உரிமைகளும் ஒதுக்கப்பட்டுள்ளன.



இந்தியாவில் அச்சிடப்பட்டது.

ஆங்கில அங்கீகாரம்: 3/01
மொழிபெயர்ப்பு அங்கீகாரம்: 3/01
Priesthood and Auxillary Leaders Guidebook -ன் மொழி பெயர்ப்பு Tamil

# முன்னுரை

தங்கள் அழைப்புகளின் பொறுப்புகளையும் மற்றும் அவற்றை எவ்வாறு நிறைவேற்றுவது எனவும் ஆசாரியத்துவ, மற்றும் துணைத் தலைவர்கள் கற்றுக் கொள்ள உதவ இந்தக் கையேட்டினை சபை ஆயத்தப்படுத்தியுள்ளது. “கிறிஸ்துவண்டை வாருங்கள், அவரில் பூரணப்படுங்கள்” (மரோனி 10:32). என அனைத்து ஜனங்களையும் அழைக்கும் சபை ஊழியத்தை நிறைவேற்ற எல்லா தலைவர்களும் சபையாரும் உதவவேண்டும். இந்த ஊழியத்தை நிறைவேற்ற, தலைவர்கள் அங்கத்தினருக்கு உதவுகின்றனர்:

- இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை சகல ஜாதிகளுக்கும் கோத்திரத்தாருக்கும், பாஷைக்காரருக்கும், ஜனக்கூட்டத்தாருக்கும் பிரகடனம் செய்யுங்கள். ஆவியினால் உணர்த்தப்பட்டபடி சாட்சி சொல்லி சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- பரிசுத்தவான்களைப் பூரணப்படுத்துங்கள். அவர்களுக்கு ஒரு நண்பன் உண்டு, ஒரு பணி உண்டு மற்றும் தேவனுடைய வார்த்தைகளால் போஷிக்கப்படுகிறார்கள் என உறுதி செய்து, புதிதாகக் குணப்பட்டவர்கள் சபையில் முன்னேற உதவுங்கள். நியமனங்களைப் பெற்று, சுவிசேஷ உடன்படிக்கைகளை ஏற்படுத்தி, அவர்கள் வாக்குத்தத்தம் செய்து கொண்டபடி கற்பனைகளைக் காப்பதில் உறுதியாக இருந்து, தங்களது சக தோழர்களுக்கு சேவை செய்து, ஏழை மற்றும் வறியவர்களிடத்தில் அக்கறை கொண்டு, பரிசுத்தவான்களின் சமுதாயத்தைக் கட்டி எழுப்ப ஒருவருக்கொருவர் ஐக்கியமாக இருக்க வேண்டும்.

- மரித்தோரை மீட்டுக் கொள்ளுங்கள். குடும்ப மேன்மைப்படுதலுக்காக ஆயத்தம் செய்ய இயன்ற வரையிலும் மரித்த முன்னோரை அடையாளம் கண்டு ஆலய நியமங்களை நிறைவேற்றுங்கள்.

## சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளுங்கள்



சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள சபையாரைக் கர்த்தர் கேட்கிறார். தாங்களும் அவ்வாறே செய்து, பிற அங்கத்தினரும் அவ்வாறு செய்ய ஊக்கப்படுத்த, தலைவர்கள் உணர்த்த வேண்டும். சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ள சில வழிகள்:

- சுவிசேஷக் கொள்கையின்படி ஜீவித்து நல்ல எடுத்துக்காட்டை ஏற்படுத்துதல்

- சுவிசேஷத்தைப்பற்றி நண்பர்களுக்கும் குடும்பத்தினருக்கும், சொல்லி தங்கள் ஜீவியங்களில் அது கொண்டு வரும் ஆசீர்வாதங்களைச் சொல்லுதல்.

- சேகர அல்லது முழு நேர ஊழியக்காரர்களுக்கு உதவுதல்.

- பிறருக்கு சுவிசேஷத்தை அறிமுகப்படுத்த நிகழ்ச்சிகளையும் திட்டங்களையும் திட்டமிடுதல்.

சுவிசேஷத்தைப் பகிர்ந்து கொள்ளும் மற்றொரு வழி, முழு நேர ஊழியங்களுக்காக சேவை செய்ய ஆயத்தப்பட அங்கத்தினர்களுக்கு உதவுதல் ஆகும். ஊழியம் செய்ய இளைஞர்கள் ஆயத்தப்படவும், தங்களது

பிள்ளைகள் ஊழியங்களுக்கு ஆயத்தப்பட பெற்றோரை ஊக்கப்படுத்தவும் மற்றும் ஓய்வுபெற்ற தம்பதியர்களை ஊழியம் செய்ய ஊக்கப்படுத்தவும் தலைவர்கள் உதவலாம். மேலும் தங்களது சொந்த ஊழியங்களுக்காகவும், ஊழியக்காரர்களை ஆதரிக்கவும், பணத்தை சேமிக்க, அங்கத்தினர்களுக்கு அவர்கள் ஆலோசனை அளிக்கலாம்.

கிளைத் தலைவரின் வழிகாட்டுதலின்படி, கிளை ஊழியத்தலைவர் (அழைக்கப்படும் பொழுது) கிளையின் ஊழியப் பணிகளை ஒருங்கிணைக்கி-றார்.

## பரிசுத்தவான்களைப் பூரணப்படுத்துங்கள்

மேன்மைப்படுதலுக்கு ஆயத்தமாக தினமும் சுவிசேஷத்தில் ஜீவிக்க ஒவ்வொரு அங்கத்தினரையும் ஊக்குவித்து உதவுவது, பரிசுத்தவான்களைப் பூரணப்படுத்துவதில் அடங்கும். பரிசுத்தவான்களைப் பூரணப்படுத்துவதில் ஆவிக்குரிய பரிமாணமும், உலகப்பிரகாரமான பரிமாணமும் உள்ளன.

### ஆவிக்குரிய ஆயத்தம்



அங்கத்தினர்கள் தங்களுடைய ஆவிக்குரிய பலத்தில் வளருவதற்கு எப்படி உதவ வேண்டும் என்பதை அறிவதற்கான உணர்த்துதலுக்காக, தலைவர்கள் தொடர்ந்து ஜெபிக்க வேண்டும். சுவிசேஷத்தைப் போதிப்பதாலும், அதன்படி ஜீவிக்க வலியுறுத்துவதாலும், அவர்கள் ஆவிக்குரியவைகளில் ஆயத்தப்பட தலைவர்கள் அங்கத்தினர்களுக்கு உதவமுடியும். ஜெபத்தினாலும், உபவாசத்தினாலும், திருவிருந்தில் பங்கேற்பதாலும், வேதங்களையும் கடைசி நாட்கள் தீர்க்கதரிசிகளின் போதனைகளைப் படிப்பதாலும் கர்த்தரை அண்டிக்கொள்ள அங்கத்தினர்களை அவர்கள் ஊக்குவிக்க வேண்டும். அவர்கள் சேவை செய்யும் சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட வேண்டும். சபைக் கூட்டங்கள் ஆவிக்குரிய பிரகாரமாய், பலப்படுத்துவதாய் இருப்பதை உறுதி செய்ய வேண்டும். அங்கத்தினர்களுக்கு தனித்தனியே ஊழியம் செய்து அன்பைத் தெரிவிக்க வேண்டும்.

பரிசுத்தவான்களைப் பூரணப்படுத்தும் முயற்சிகள் தனி நபர்களையும் குடும்பங்களையும் மையப்படுத்தியதாக இருக்க வேண்டும். குடும்பங்களையும் வீடுகளையும் சபை பலப்படுத்துகிறது, ஆதரிக்கிறது. சுவிசேஷம் போதிக்கவும், தலைமை தாங்கவும் வீடு மிகவும் முக்கியமான இடம். தலைவர்கள் குடும்ப அங்கத்தினர்களை நேசிக்கவும், ஒருவருக்கொருவர் சேவை செய்யவும், ஊக்குவிக்க வேண்டும். மேலும் தங்கள் பிள்ளைகளுக்கு சுவிசேஷத்தைப் போதிக்க பெற்றோருக்குப் பொறுப்பிருக்கின்றது எனவும், ஒழுங்காக குடும்ப இல்ல மாலை நடத்தவும் வலியுறுத்த வேண்டும்.

ஆலய ஆசீர்வாதங்களைப் பெற சபையார் அனைவரும் ஆயத்தப்பட வேண்டும். இவற்றைச் செய்யும் அங்கத்தினர்களின் பொறுப்புகள், செய்ய, *குடும்ப வழிகாட்டிப் புத்தகத்தில்* (31180) குறிப்பிடப்பட்டுள்ளன. ஆலயங்களைப் பற்றி கற்பித்து, அங்கத்தினர் ஆலய ஆசீர்வாதங்களைப் பெற ஆயத்தப்பட தலைவர்கள் உதவ முடியும். தேவையுள்ள இடங்களில் செல்லுபடியாகக்கூடிய ஆலய சிபாரி-சைப் பெற்று எப்போதும் வைத்திருக்குமாறு தகுதியுடன் ஜீவிக்க தலைவர்கள் அங்கத்தினர்களை ஊக்குவிக்க வேண்டும். ஞானஸ்நான உடன்படிக்கை போன்ற உடன்படிக்கைகளுக்குள் கர்த்தருடன் உட்பிரவேசிக்கும் ஒருவர், மற்றும் அந்த

உடன்படிக்கைகளைக் கைக்கொள்ள கருத்தாய் முயற்சிப்பவர்களே தகுதிவாய்ந்தவர்கள்.

### சரீர மற்றும் உலகப்பிரகார ஆயத்தம்

சுயசார்புடனும், எதிர்பாராத நிகழ்ச்சிகளுக்கு ஆயத்தம் செய்தும் இருக்க அவர்களுக்குப் போதித்து, சரீர மற்றும் உலகப்பிரகார தேவைகளைச் சந்திக்க ஆயத்தப்பட அங்கத்தினர்களுக்கு தலைவர்கள் உதவ முடியும். தலைவர்கள் அங்கத்தினருக்கு, உபவாச நியாயப் பிரமாணத்தையும், தசமபாக நியாயப் பிரமாணத்தையும் கடைபிடிக்கக் கற்பித்து, தங்கள் வருவாய்க்குள் வாழ ஊக்குவித்து, அவர்களைக் கண்காணித்து உதவ, வீட்டு விசாரிப்புப் போதகர்களை தலைவர்கள் நியமிக்கலாம்.

கிளையிலுள்ள ஏழைகள் மற்றும் வறியோரைத் தலைவர்கள் தேடி, கவனித்து உதவ வேண்டும். அங்கத்தினரும் அவ்வாறே செய்ய கற்பிக்க வேண்டும்.

தங்கள் சரீரப் பிரகாரத் தேவைகளை எவ்வாறு சந்திக்கலாம் என்பதுபற்றிய அதிக தகவல்களுக்கு, *குடும்ப வழிகாட்டிப் புத்தகம்* பார்க்கவும்.

## ஆலய நியமங்களும் குடும்ப வரலாறும்



தங்கள் சொந்த ஆலய நியமங்களைப் பெறுவதுடன், தங்கள் முன்னோரைக் கண்டு பிடித்து, அவர்களுக்காக ஆலய நியமங்களை நிறைவேற்றி, மரித்தோரை மீட்க அங்கத்தினர் உதவுகின்றனர். அவர்கள் முதற்கட்டமாக தங்கள் முன்னோரின் நான்கு தலைமுறைகளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும். மரித்தோரை மீட்பது சம்பந்தமான கோட்பாடுகளைப் போதித்து, ஆலயப் பணிகளுக்காக பெயர்களைக் கொடுக்க அவர்களை ஊக்குவித்து, முடியக்கூடிய இடங்களில் மரித்த தங்கள் முன்னோருக்கும் பிறருக்கும் ஆலய நியமங்களை நிறைவேற்ற அவர்களை ஊக்குவித்து தலைவர்கள் உதவமுடியும்.

# ஆசாரியத்துவம்



ஆசாரியத்துவம் தேவனின் வல்லமையும் அதிகாரமும் ஆகும். “மனுஷனின் அழியாமையையும், நித்திய ஜீவனையும் கொண்டு வருகிற” (மோசே 1:39). இதன் மூலம் அவர் தன் பணியையும் மகிமையையும் நிறைவேற்றுகிறார். சபையின் தகுதிவாய்ந்த ஆண் அங்கத்தினர்கள் தனது ஆசாரியத்துவத்தைத் தரித்திட இயேசு கிறிஸ்து அனுமதிக்கிறார். அவர்கள் ஆசாரியத்துவத்தில் நியமிக்கப்பட்ட பின்பு, பூலோகத்தில் தேவனுடைய இராஜ்யத்தில் அழைக்கப்படுகிறது போல, சுவிசேஷத்தைப் பிரசங்கித்தல், ஆசாரியத்துவ நியமங்களை நிறைவேற்றுதல், ஊழியம் செய்தல் போன்ற கர்த்தரின் பணியைச் செய்ய அவர்கள் அங்கீகரிக்கப்படலாம்.

‘‘மெல்கிசெதேக்கு மற்றும் ஆரோனின் ஆசாரியத்துவம் என்னும் பெயருடைய இரண்டு ஆசாரியத்துவங்கள் சபையில் உள்ளன” (கோ.உ. 107:2-5). பரலோக தூதர்கள் ஜோசப் ஸ்மித் மூலமாக பூமியில் ஆசாரியத்துவ அதிகாரத்தை ஸ்தாபித்தனர்.

## மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம்

மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம்தான் உயர்ந்த ஆசாரியத்துவம். இதன் பெயர் ஆபிரகாமின் காலத்தில் வாழ்ந்த ஒரு பெருபிரதான ஆசாரியரின் பெயரில் இருந்து வருகிறது (கோ.உ. 107:2-5). இந்த ஆசாரியத்துவம் தரித்த சகோதரர்கள், சபையின் தலைமை ஸ்தானங்களை வகிக்கவும், சுவிசேஷம் போதிக்கப்படுவதை வழிநடத்தவும் வல்லமையும் அதிகாரமும் பெற்றிருக்கிறார்கள். ஊழியங்கள், சேகரங்கள், கிளைகள் மற்றும் குழுக்களுக்கு அழைக்கப்பட்டு, அவர்கள் தலைமை ஏற்கலாம்.

ஒரு மனுஷன் மெல்கிசெதேக்கு அலுவலில் நியமிக்கப்படும் முன்பு, அவன் தன் மீது அருளப்பட்ட மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவத்தைப் பெற்றிருக்க வேண்டும். பின்பு அவன் அந்த ஆசாரியத்துவத்தின் ஒரு அலுவலில் நியமிக்கப்படுகிறான். இந்த அலுவல்கள், மூப்பர், பிரதான ஆசாரியன், கோத்திரத்தலைவன், எழுபதின்மர், மற்றும் அப்போஸ்தலர் ஆகும். ஊழிய அல்லது சேகர ஆசாரியத்துவத் தலைவர்கள், மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்த சகோதரர்களை, ஊழியத்தில் அல்லது சேகரத்தில் மூப்பர் குழுக்களாக அமைக்கிறார்கள். ஒவ்வொரு மூப்பர் குழுவுக்கும் ஒரு தலைவர் தலைமை ஏற்கிறார். அவர் குழு அங்கத்தினர்களுக்கு தங்கள் கடமைகளைக் கற்பித்து, குழு அங்கத்தினரிடையே சகோதரத்துவத்தை ஊக்குவிக்கின்றார். மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்த கிளையின் அனைத்து சகோதரர்களும் மூப்பர் குழுவின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

## மூப்பரும் மூப்பர் குழுத் தலைமையும்

மூப்பர்கள் போதித்து, பிரசங்கித்து, ஞானஸ்நானம் கொடுத்து சபையைக் கண்காணித்துக் கொள்ள வேண்டும். ஆரோனின் ஆசாரியத்துவ அலுவல்களின் அதிகாரத்துக்கும், பொறுப்புகளுக்கும் கூடுதலாக மூப்பர்கள் பரிசுத்த ஆவியானவரின் வரங்களை அருளலாம், வியாதியஸ்தருக்கு சேவை செய்யலாம், பிற நியமங்களையும் நிறைவேற்றலாம். (*குடும்ப வழிகாட்டிப் புத்தகத்தில்* "ஆசாரியத்துவ நியமங்களும், ஆசீர்வாதங்களும்" பார்க்கவும்). அதிகாரம் பெற்ற பிரதான ஆசாரியன் இல்லாதபோதும், தங்கள் ஆசாரியத்துவத் தலைவர்கள் அதிகாரம் கொடுக்கும்போதும் மூப்பர்கள் சபைக் கூட்டங்களுக்குத் தலைமை தாங்கலாம். (கோ.உ. 20:42-45; 107:11 பார்க்கவும்.)

மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்த தகுதி வாய்ந்த மனுஷர்களை ஒரு கிளை கொண்டிருக்கும்போது, குழு அங்கத்தினர்களிலிருந்து, ஒரு குழுத்தலைவரை அழைத்து, பணியில் அமர்த்தி, ஆவியால் நடத்தப்பட்டவாறே கிளையில் மூப்பர் குழுவை அமைக்கலாம். கிளையில் மூப்பர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது, ஊழியத்தலைமை, மூப்பர் குழுத்தலைவருக்கு இரண்டு ஆலோசகர்களை அழைத்து பணியமர்த்தலாம். ஒவ்வொரு மூப்பர் குழுவும் 96 அங்கத்தினர்களைக் கொண்டிருக்கலாம். தகப்பன்மார்களுக்கும், குழு அங்கத்தினர்களுக்கும் குழு எடுத்துக்காட்டையும், உதவியையும், வழிகாட்டுதலையும் செய்யலாம்.

மூப்பர் குழுத் தலைவர் சேகர அல்லது ஊழியத் தலைவர் வழிகாட்டுதலின்கீழ் செயலாற்றுகிறார், மற்றும் அவருக்கு பொறுப்பாளி ஆக வேண்டும். ஒரு கிளை ஆசாரியத்துவ செயற்குழு அங்கத்தினர், மற்றும் கிளை அவையின் அங்கத்தினர் என்ற முறையில், குழுத் தலைவர் கிளைத் தலைவரின் வழிகாட்டுதலின்படியும் பணியாற்றுகிறார். குழுத்தலைவர், கிளையின் குழு அங்கத்தினர்களுக்குத் தலைமை ஏற்று, அவர்களுக்கு எடுத்துக்காட்டாய்த் திகழுகிறார். அனைத்து கிளை அங்கத்தினர்களுடனும் சபை உயிரோட்டமுள்ள தொடர்பு வைத்திருக்கிறது என்பதை உறுதி செய்ய, வீட்டுப் போதனையை அமைத்து, செயலாற்ற கிளைத் தலைவருடன் பணியாற்றுகிறார்.

குழுத்தலைவர், குழு அங்கத்தினருக்கு, சுவிசேஷத்தையும் ஆசாரியத்துவக் கடமைகளையும் போதிக்கிறார் (கோ.உ.107:89). விசேஷமாக கணவர்கள் மற்றும் தந்தையர்கள் என்ற பொறுப்புகளில் மகிழ்ச்சியுடனும் தாழ்மையுடனும், பணியாற்ற அவர்களை ஊக்குவிக்கிறார். அங்கத்தினர்களுக்கு உதவக்கூடிய மற்றும் குழுவின் சகோதரத்துவத்தைக் கட்டக்கூடிய ஆசாரியத்துவ நியமங்களை எவ்வாறு நிறைவேற்றுவதென்றும், சேவைத் திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சிகளைத் திட்டமிடுவதையும் அவர்களுக்கு அவர் கற்றுக்

கொடுக்கிறார். அவர் குழுவின் அங்கத்தினரின் ஆவிக்குரிய, உலகப்பிரகாரமான நன்மைகளுக்குப் பொறுப்பாகிறார்

மூப்பர் குழுத் தலைவர் மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்தவர்களையும் வயது வந்த (19 மற்றும் அதற்கு மேலும்) ஆரோனின் ஆசாரியத்துவம் தரித்தவர்களையும் வீட்டுப் போதகர்களாகப் பணியமர்த்துகிறார். கிளைத் தலைவர் அனுமதியுடன், ஆரோனின் ஆசாரியத்துவத்தில் ஆசிரியர்களாகவும், ஆசாரியர்களாகவும் இருக்கின்ற வாலிபர்களை வீட்டுப் போதகர்களாகப் பணியமர்த்துகிறார். வீட்டுப்போதகர்கள் தனிப்பட்ட பேட்டிகளின்போது இருவர் தோழர்களாக பணியமர்த்தப்படுகிறார்கள். கிளைத் தலைவரால் ஒப்புக் கொள்ளப்படுகிறவாறு, மூப்பர் குழுத் தலைவர், விசேஷமாக ஒரு தம்பதியினர் தேவைப்படும்போது சந்திப்புகளில் தன் கணவனுடன் செல்ல, ஒரு மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்தவரின் மனைவியைப் பணி-யமர்த்தலாம்.

குழுத் தலைவர் வீட்டுப் போதகத்தின் நோக்கங்களைக் குழு அங்கத்தினர்களுக்குக் கற்பித்து, (பக்கம் 6-7 பார்க்கவும்) அவற்றை நன்கு நிறைவேற்ற உணர்ச்சியூட்டுகிறார். குழுத்தலைமையின் அங்கத்தினர் ஒருவர், அவர்களின் சந்திப்புகளின் குறிப்புகளைப் பெறவும், அங்கத்தினர்களின் தேவைகளைத் தெரிந்து கொள்ளவும், வழக்கமாக பேட்டி காண்கிறார்.

மூப்பர் குழுத்தலைவர் வீட்டுப் போதகத்தை மேற்பார்வையிட்டு, வீட்டுப்போதகச் சந்திப்புக்களைப்பற்றியும், அங்கத்தினர்களின் தேவைகளைப்பற்றியும், வீட்டுப்போதகச் சந்திப்புகளின் மூலம் அறிந்த விபரங்களை கிளைத் தலைவருக்குத் தெரிவிக்கிறார்.

குழுத் தலைவர், குழு அங்கத்தினர்களை சபைக்கூட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் கலந்து கொள்ளவும், சேவை செய்யவும் ஊக்குவிக்கி-றார். நியமனம் பெறாதவர்களுக்கும், 18 வயதுக்கு மேற்பட்ட ஆரோனின் ஆசாரியத்துவம் தரித்தவர்களுக்கும், மெல்கிசெதேக்கின் ஆசாரியத்துவம் பெறவும், ஆலய நியமங்களைப் பெறவும் அவர் உதவுகிறார். இந்த முயற்சிகளில் வீட்டுப் போதகர்கள் உதவுகின்றனர். ஆனால் அடிக்கடி தலைவர் தனிப்பட்ட முறையில் தன் குழு அங்கத்தினர்களுக்கு ஆலோசனை கூற வேண்டும்.

### பிரதான ஆசாரியன், கோத்திரத்தலைவன், எழுபதின்மர், மற்றும் அப்போஸ்தலர்

பிரதான ஆசாரியன், கோத்திரத்தலைவன், எழுபதின்மர், மற்றும் அப்போஸ்தலர் பற்றிய தகவல்களுக்காக, *சுவிசேஷக் கொள்கைகள்*, அத்தியாயம் 14 பார்க்கவும்.

### வீட்டுப் போதகம்



வீட்டுப் போதகர்கள் ஆசாரியத்துவம் தரித்த சகோதரர்கள், கண்காணிக்கவும் ஆசாரியத் தலைவர்களுக்கு உதவவும், சபையாரைப் பலப்படுத்தவும் அழைக்கப்பப்பட்டவர்கள். உதவிக்காரனின் விதிவிலக்குடன், மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் மற்றும் ஆரோனின் ஆசாரியத்துவம் தரித்த ஆண்கள் வீட்டுப் போதகர்களாகப் பணியாற்றலாம்.

வீட்டுப்போதகர்கள், அங்கத்தினர்களை ஒழுங்காகச் சந்தித்து, அவர்களுக்கு அன்பைத் தெரிவித்து, அவர்களுக்கு சுவிசேஷத்தைப் போதித்து, கிறிஸ்துவண்டையில் வர அழைக்க வேண்டும். வீட்டுப் போதகர்கள், தகப்பன்மாரை ஜெபிக்கவும், தங்கள் குடும்பங்களைப் போதுமானபடி கவனிக்கவும் ஊக்குவிக்க வேண்டும். வீட்டுப் போதகர்கள் சபையாருக்கு சுகவீனத்தின்போதும், இழப்பின்போதும், தனி-மையின்போதும், வேலையின்மையின்போதும், விசேஷத் தேவைகளுள்ளபோதும் உதவுகின்றனர். (கோ.உ. 20:51, 53, 59 பார்க்கவும்.)

வீட்டுப் போதகர்கள் தங்களுக்கு ஒப்படைக்கப்பட்ட குடும்பத்தை சந்திக்கும்போது, கர்த்தரையும், கிளைத்தலைவரையும், குழுத் தலைவரையும் பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள். அவர்கள் குடும்பத்தினரின் ஆர்வங்களையும், தேவைகளையும்பற்றி அறிந்து, அவைகளில் ஒரு உண்மையான ஆர்வம் காட்டுகிறார்கள். ஆவியால் உணர்த்தப்பட்டபடி, வீட்டுப் போதகர்கள் சவிசேஷத்தைக் கற்பிக்க, தாங்கள் சந்திக்கின்ற, தனி நபர்களையும் குடும்பத்தினரையும் விசுவாசத்தில் விருத்தியடையவும், பலப்படவும் முயலுகின்றனர். முடிந்தால் ஒவ்வொரு வீட்டுப் போதகரும் ஒரு தோழனைப் பெற வேண்டும்.

வீட்டுப் போதகர்கள்:

- ஒப்படைக்கப்பட்ட அங்கத்தினருடன் செயல் தொடர்புடன் இருக்க வேண்டும்.
- தகப்பனை குடும்பத்தின் தலைவராக அங்கீகரித்து, (அல்லது தாய், வீட்டில் தகப்பன் இல்லாத போது), அழியாமையையும், நித்திய ஜீவனையும் நோக்கிச் செல்லும் பயணத்தில் தன் குடும்பத்தினரை நடத்த உதவுகின்றனர்.
- வேதங்களிலிருந்தோ, *பிரதான தலைமையின் செய்தி*, *லியஹோனாவிலுள்ளபடி* ஜீவிக்கிற தீர்க்கதரிசிகளிடமிருந்தோ செய்திகளைப் பகிர்ந்து கொண்டு சபையினர் இயேசுகிறிஸ்துவில் விசுவாசம் கொள்ள உதவுகின்றனர்.
- தாங்கள் சந்திக்கிறவர்களுடன் ஜெபித்து, ஆசீர்வதிக்கின்றனர்.
- குடும்பக் கூட்டங்கள், குழு மற்றும் கிளை நிகழ்ச்சிகள் மற்றும் சிறப்புத் திட்டங்கள் பற்றி தகவல் தெரிவித்து அவர்கள் பங்கேற்க உதவுகின்றனர்.
- அங்கத்தினர்களின் முன்னேற்றம் குறித்து, மூப்பர் குழுத் தலைவரிடம் (கிளையில் மூப்பர் குழு இல்லையெனில் கிளைத் தலைவரிடம்) அறிக்கை கொடுக்க வேண்டும்.
- குடும்பத்தினர் எல்லா அத்தியாவசிய சுவிசேஷ நியமங்களையும் பெறவும், தொடர்புடைய உடன்படிக்கைகளைக் கைக்கொள்ளவும் ஊக்குவித்து உதவுகின்றனர்.
- அங்கத்தினர்கள் ஊழியப் பணியாற்றவும், குடும்ப வரலாறு மற்றும் ஆலயப்பணி செய்யவும் ஊக்குவிக்கப்படுகின்றனர்.

**நியமங்களும் ஆசீர்வாதங்களும்**

ஆசாரியத்துவ நியமங்கள் கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட பரிசுத்த காரியங்கள் மற்றும் ஆசாரியத்துவ அதிகாரத்தினால் நிறைவேற்றப்படுகின்றன. ஆசாரியத்துவ ஆசீர்வாதங்கள் குணமாக்கவும், தேற்றவும், ஊக்கமூட்டவும் கொடுக்கப்படுகின்றன. ஞானஸ்நானம் கொடுத்தல், திருவிருந்து ஆசீர்வதித்து பரிமாறுதல் ஆகியவை ஆசாரியத்துவ நியமங்களுக்கு உதாரணங்கள். சில நியமங்கள் ஆரோனின் ஆசாரியத்துவம் தரித்த சகோதரர்களால் நிறைவேற்றப்படலாம், ஆனால் அதிகமாக நியமங்கள் மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் பெற்றவர்களால்

நிறைவேற்றப்படுகின்றன (இந்த வழிகாட்டிப் புத்தகத்தில் “ஆரோனின் ஆசாரியத்துவம், மற்றும் *குடும்ப வழிகாட்டிப் புத்தகம்* பார்க்கவும்). கிளைத் தலைவர்களும் மூப்பர் குழுத்தலைவர்களும், நியமங்களை எவ்வாறு நிறைவேற்றுவது என சகோதரர்களுக்குக் கற்பிக்க வேண்டும். இத்தலைவர்கள் குடும்பத்தினருக்காக நியமங்களை நிறைவேற்ற ஆயத்தப்படவும், தகுதியாயிருக்கவும் உதவ வேண்டும். நியமங்களையும் ஆசீர்வாதங்களையும் நிறைவேற்றுகின்ற சகோதரர்கள் சுவிசேஷக் கொள்கைகளின்படி தாங்கள் ஜீவித்து, பரிசுத்த ஆவியால் வழி நடத்தப்பட முயற்சி செய்து ஆயத்தப்பட வேண்டும். அவர்கள் ஒவ்வொரு நியமத்தையும் ஆசீர்வாதத்தையும் ஒரு கண்ணியமான முறையில் நிறைவேற்றுகின்றனர். ஒவ்வொரு நியமமும் நிறைவேற்றப்பட வேண்டிய விதமாவது:

1. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில்.

2. ஆசாரியத்துவ அதிகாரத்தினால்.

3. குறிப்பிட்ட வார்த்தைகளில் அல்லது பரிசுத்தப்படுத்தப்பட்ட எண்ணெய் போன்ற எந்த தேவையான முறைப் படியும்

4. தேவைப்பட்டால், தேவையான திறவுகோல்களைத் தாங்கியிருக்கும், *நியமிக்கப்பட்ட ஆசாரியத்துவத்தலைவரின் அங்கீகாரத்துடன், ஆசாரியத்துவத் தலைவரின் அங்கீகாரம் தேவைப்படும் நியமங்கள், குழந்தைகளுக்குப் பெயர் வைத்து ஆசீர்வதித்தல், ஞானஸ்நானம் நிறைவேற்றி, திடப்படுத்துதல், ஆசாரியத்துவத்தை அருளி, ஆசாரியத்துவ அலுவலில் நியமித்தல், திருவிருந்தை ஆசீர்வதித்துப் பரிமாறுதல், மற்றும் கல்லறை-களை பிரதிஷ்டை செய்தல் ஆகியன.*

*குறிப்பிட்ட நியமங்களுக்கும் ஆசீர்வாதங்களுக்கும் குடும்ப வழிகாட்டிப் புத்தகத்தைப்* பார்க்கவும்.

## ஆரோனின் ஆசாரியத்துவம்



ஆரோனின் ஆசாரியத்துவம் “ஒரு பெரிய அல்லது மெல்கிசெதேக் ஆசாரியத்துவத்தின் இணைப்பு ஆகும்” (கோ.உ. 107:14). இது மோசேயின் சகோதரனாகிய ஆரோனுக்கும் அவனது சந்ததிக்கும் அருளப்பட்டது ஆகும். ஆரோனின் ஆசாரியத்துவம் தரித்த சகோதரர்கள், குறிப்பிட்ட ஆசாரியத்துவ நியமங்களை நிறைவேற்ற அதிகாரமுடையவர்கள். ஆசாரியர்கள் ஞானஸ்நானம் நிறைவேற்றலாம், திருவிருந்தை ஆசீர்வதிக்கலாம், ஆசாரியர்களையும், ஆசிரியர்களையும், உதவிக்காரர்களையும் நியமிக்கலாம். ஆசாரியர்களும், ஆசிரியர்களும் திருவிருந்து ஆயத்தம் செய்யலாம். ஆசாரியர்கள் ஆசிரியர்கள் மற்றும் உதவிக்காரரும் திருவிருந்து பரிமாறலாம். (கோ.உ. 107:13-14, 20 பார்க்கவும்.)

ஒருவருக்கு ஆரோனின் ஆசாரியத்துவம் அருளப்படும்போது, அந்த ஆசாரியத்துவத்தில் ஒரு அலுவலில் அவர் நியமிக்கப்படுகிறார். அந்த அலுவல்கள் உதவிக்காரர், ஆசிரியர், மற்றும் ஆசாரியர். எண்ணிக்கை அதிகரிக்கும்போது, கிளையில் ஆரோனின் ஆசாரியத்துவத்தின் தலைவராகிய கிளைத் தலைவர், ஒரே

அலுவலில் உள்ள சகோதரர்களை உதவிக்காரர் (வயது 12-13), ஆசிரியர்கள் (வயது 14-15), மற்றும் ஆசாரியர்கள் (வயது 16-18) குழுக்களாக, ஆவியில் நடத்தப்படுகிறபடி அமைக்கிறார்.

ஆரோனின் ஆசாரியத்துவத் தலைமையின் திறவுகோல்களைத் தாங்கியுள்ள கிளைத் தலைவர் கிளையின் ஆரோனின் ஆசாரியத்துவத் தலைவர். அவர் ஆசாரியர் குழுவின் தலைவர் மற்றும் ஆசாரியர் குழுவில் உள்ள தகுதி வாய்ந்த இரு ஆசாரியர்களை தன் துணைவர்களாக நியமிக்கலாம். அவர் ஒரு தகுதிவாய்ந்த ஆசிரியரையும், உதவிக்காரனையும் முறையே ஆசிரியர் மற்றும் உதவிக்காரரை குழுத் தலைவர்களாக அழைக்கலாம். அவர் அல்லது ஒரு பணிக்கப்பட்ட ஆலோசகர், இந்தக் குழுக்களின் தலைமைகளை முழுமையாக்க ஆசிரியர் மற்றும் உதவிக்காரர் தலைவர்களுக்கு இரண்டு ஆலோசகர்களை அழைக்கலாம். குழுக்களில் வாலிபர்கள் போதுமான எண்ணிக்கையில் இருக்கும்போது, கிளைத் தலைமையின் ஒரு அங்கத்தினர் குழுவின் செயலாளராகப் பணியாற்ற ஒவ்வொரு குழுவிலும் ஒரு வாலிபனை அழைக்கலாம். கிளைத் தலைவர் ஆசாரியர் குழுவிலுள்ள தன் ஆலோசகர்களையும், ஆசிரியர், உதவிக்காரர் குழுத்தலைவர்களையும் பணியமர்த்துகிறார். கிளைத்தலைமையின் ஒரு அங்கத்தினர், குழுத் தலைமைகளில் ஆலோசகர்களையும் செயலாளர்களையும் பணியமர்த்துகிறார்.

ஆசாரியத்துவத் தொடக்க நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து ஆரோனின் ஆசாரியத்துவம், கிளைத் தலைவர் வழிநடத்தலின்படி, மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்தவர்களிலிருந்து தனியாகச் சந்திக்கிறார்கள்.

ஆரோனின் ஆசாரியத்துவக் குழுக்களை, கிளைத் தலைவர் அமைக்கும்போது, வாலிபர்களின் தலைவராகப் பணியாற்ற மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்தவர் அல்லது ஆரோனின் ஆசாரியத்துவத்தில், ஆசாரியர் அலுவலில் உள்ளவரை, அவர் அழைத்து, ஆவியால் நடத்தப்படுகிறபடி,

மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்தவர்களிலிருந்து தனியாகச் சந்திக்கிறார்கள். ஆரோனின் ஆசாரியத்துவக் குழுக்களை கிளைத் தலைவர் அமைக்கும்போது, வாலிபர்களின் தலைவராகப் பணியாற்ற மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவம் தரித்தவர் அல்லது ஆரோனின் ஆசாரியத்துவத்தில், ஆசாரியர் அலுவலில் உள்ளவரை, அவர் அழைத்து, ஆவியால் நடத்தப்படுகிறபடி பணியமர்த்துகிறார். மறுஸ்தாபி-தம் செய்யப்பட்ட சுவிசேஷக் கொள்கைகளுடன் இசைந்து வாழ புரிந்து கொள்ளுதலையும் ஒப்புக்கொடுத்தலையும் அதிகரிக்கவும், ஒவ்வொரு குழு அங்கத்தினரும் இயேசு கிறிஸ்துவில் தன் விசுவாசத்தை அதிகரிக்க உதவ வாலிபர்களின் தலைவர், கிளைத் தலைமையுடனும், ஆரோனின் ஆசாரியத்துவக் குழுத் தலைமைகளுடன் பணியாற்றுகிறார்.

ஆரோனின் ஆசாரியத்துவத்தின் நோக்கமானது, அந்த ஆசாரியத்துவத்தில் நியமிக்கப்பட்ட ஒவ்வொருவருக்கும் உதவுவது ஆகும்:

- இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தில் குணப்பட்டு, அதன் போதனைகளின்படி ஜீவித்தல்.
- ஆசாரியத்துவ அழைப்புகளில் விசுவாசத்துடன் உழைக்கவும், ஒவ்வொரு ஆசாரியத்துவ அலுவலின் பொறுப்புகளையும் நிறைவேற்றுவதாகும்.
- அர்த்தமிக்க சேவை செய்யுங்கள்.
- மெல்கிசெதேக்கு ஆசாரியத்துவத்தைப் பெறவும், ஆலய நியமங்களைப் பெறவும் தகுதியுடன் வாழ்ந்து ஆயத்தம் செய்யுங்கள்.
- ஒரு கண்ணியமிக்க முழுநேர ஊழியம் செய்ய ஆயத்தம் செய்யுங்கள்.
- இயன்றவரை கல்வி கற்று, ஒரு தகுதியான கணவராகவும் தகப்பனாகவும் ஆக ஆயத்தமாகுங்கள்.
- பெண்களுக்கும், சிறுமிகளுக்கும், குழந்தைகளுக்கும் போதிய மரியாதை கொடுங்கள்.

சேவைத்திட்டங்கள், குழுக் கூட்டங்களுக்கும் இந்த நோக்கங்களை அடைய உதவும் நிகழ்ச்சிகளுக்கும் திட்டமிடவும், கிளைத் தலைவர், ஆரோனின் ஆசாரியத்துவத் குழுத் தலைவர்களுடன் இணைந்து பணியாற்றுகிறார். வாலிபர்கள் நண்பர்களைப் பெறவும், சேவை செய்ய ஒரே மாதிரியான நம்பிக்கைகளையும், தரங்களையும் பகிர்ந்து கொள்கிற பிறருடன், திறமைகளை வளர்த்துக் கொள்ள, முழுமையான சூழலை கொடுக்கக் கூடியவையாக நிகழ்ச்சிகள் இருக்க வேண்டும்.

கிளைத் தலைவரின் மேற்பார்வையின் கீழ், ஆரோனின் ஆசாரியத்துவ மற்றும் இளம் பெண்கள் மற்றும் வயது வந்த தலைவர்களின் ஒத்துழைப்புடன் ஆரோனின் ஆசாரியத்துவத் தலைமைகளும் வாலிபப் பெண்கள் வகுப்புத் தலைமைகளும் ஆரோனின் ஆசாரியத்துவம் மற்றும், இளம் பெண்கள் இணைந்த நிகழ்ச்சி-களைத் திட்டமிடலாம், இணைந்த நிகழ்ச்சிகள் அந்நியோன்யம் என அழைக்கப்படுகின்றன.

### உதவிக்காரன்

ஞானஸ்நானம் பெற்று, திடப்படுத்தப்பட்ட ஒரு தகுதியுள்ள ஒரு வாலிபன், அவன் குறைந்தது 12 வயதான போது, ஒரு உதவிக்காரனாக நியமிக்கப்படலாம். வழக்கமாக உதவிக்காரர்கள் திருவிருந்து பரிமாறவும், சபைக்கட்டிடங்கள் மற்றும் திடல்களைக் கவனிக்கவும், வறியோரைக் கவனிக்க உதவவும், உபவாசக் காணிக்கைகள் சேகரிப்பது போன்ற சிறப்புப் பணிகளை முடிக்கவும் பணிக்கப்படுகிறார்கள்.

ஒரு உதவிக்காரன் குழு 12 உதவிக்காரர் வரை கொண்டிருக்கலாம். (கோ.உ. 107:85 பார்க்கவும்).

### ஆசிரியர்

குறைந்தபட்சம் 14 வயதானபொழுது, ஒரு தகுதி வாய்ந்த வாலிபன் ஆசிரியனாக நியமிக்கப்படலாம். உதவிக்காரர்களின் அதிகாரம் மற்றும் பொறுப்புகளுடன், ஆசிரியர்கள் திருவிருந்து ஆயத்தம் செய்கிறார்கள், மற்றும் வீட்டுப் போதகர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

ஒரு ஆசாரியர் குழு 24 ஆசாரியர்களைக் கொண்டிருக்கலாம் (கோ.உ. 107:86 பார்க்கவும்).

### ஆசாரியன்

குறைந்தபட்சம் 16 வயதானபொழுது தகுதியுடைய சகோதரர் ஆசாரியராக நியமிக்கப்படலாம்., சாதாரணமாக, வயது வந்த குணப்பட்ட ஆண்கள், மூப்பர்களாக நியமிக்கப்பட தேவையான அனுபவம் பெறும் வரை ஆசாரியர்களாக நியமிக்கப்படுகிறார்கள்.

மெல்கிசெதேக் ஆசாரியத்துவம் தரித்த ஒருவரும் இல்லாத போது, உதவிக்காரர்கள் மற்றும். ஆசிரியர்களின் எல்லா அதிகாரங்கள் பொறுப்புகளுடனும் ஆசாரியர்கள் ஞானஸ்நானம் கொடுத்து, திருவிருந்தைப் பரிமாறி, கூட்டங்களை நடத்தலாம் (கோ.உ. 20:46-51 பார்க்கவும்).

ஒரு ஆசாரியர் குழு 48 ஆசாரியர்களைக் கொண்டிருக்கலாம் (கோ.உ. 107:87-88 பார்க்கவும்).

# துணைக் குழுக்கள்



ஒரு கிளையில் ஆசாரியத்துவ அமைப்பு முதலில் ஏற்படுத்தப்படுகிறது. அங்கத்தினர் எண்ணிக்கை அதிகரிக்கும்போதும், தலைவர்களும் கூடுமிடங்களும் கிடைக்கும்போதும், அவைகள் தேவை எனத் தீர்மானிக்கிறபோது, ஆசாரியத்துவத்துக்கு துணைக் குழுக்களைக் கிளைத்தலைவர் அமைக்கலாம். ஒத்தாசைச் சங்கம், வாலிபர்கள், வாலிபப் பெண்கள், ஆரம்ப வகுப்பு, மற்றும் ஞாயிறு பள்ளி ஆகியன துணைக் குழுக்களாகும்.

வாலிபப் பெண்களும் தனித்துணைக் குழுக்களாகப் பிரிக்கப்பட, கிளை போதுமான பெண்களைப் பெறும் வரையில், ஒத்தாசைச் சங்கத் தலைவியின் வழி நடத்துதலுடன் கற்பிக்கப்படுவதற்காக அவர்கள் ஒன்றாகச் சந்திப்பார்கள்.

## ஒத்தாசைச் சங்கம்

கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவில் விசுவாசத்தைப் பலப்படுத்த வயது வந்த சகோதரிகளை (18 மற்றும் மேற்பட்ட) ஊக்குவித்து, ஒத்தாசைச் சங்கம் ஆசாரியத்துவத் தலைவர்களுக்குத் துணை நிற்கிறது. பெண்களும் அவர்களின் குடும்பங்களும் கிறிஸ்துவண்டை வந்து, பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெற தகுதியுடன் ஜீவிக்க ஒத்தாசைச் சங்கம் உதவுகிறது. ஒத்தாசைச் சங்க சகோதரிகள் சுவிசேஷக் கோட்பாடுகளைக் கற்பித்தும், கற்றும், தயாளமுள்ள சேவை செய்து, வீட்டுப் பணிகளில் திறமைகளை வளர்த்து, குடும்ப உறவுகளைப் பலப்படுத்தி, ஒருவருக்கொருவர் சேவை செய்து ஆதரிக்கிறார்கள்.

ஒரு கிளையில் குறைந்தபட்சம் இரண்டு பெண்கள் இருக்கும்போது கிளைத்தலைவர்

ஒத்தாசைச் சங்கத்தை அமைக்கலாம். கிளைத்தலைவரின் வழிநடத்துதலின் பேரில், ஒத்தாசைச் சங்கத் தலைவி:

- வயது வந்த பெண்களுக்காக (18 மற்றும் மேற்பட்ட) ஞாயிற்றுக் கிழமைகளில், ஆண்களும், வாலிபர்களும் ஆசாரியத்துவக் கூட்டத்தில் இருக்கும்போது, ஒரு வகுப்பை வழிநடத்துகிறார் அல்லது நடத்துகிறார்.
- பெண்கள், வாலிபப் பெண்கள் மற்றும் குழந்தைகள் தேவைகளையும், நிகழ்ச்சிகளையும் குறித்து கிளைத் தலைவருக்கு அறிவுரை வழங்கி அவருடன் பணியாற்றுகிறார்.
- வறியோரைக் கண்டுபிடித்து கவனிக்க கிளைத்தலைவருக்கு உதவுகிறார்.

## வாலிபர்கள்

இந்த வழிகாட்டிப் புத்தகத்தில் பக்கங்கள் 8-10ல் "ஆரோனின் ஆசாரியத்துவம்" பார்க்கவும்.

## வாலிபப் பெண்கள்



12லிருந்து 18வயது வரை உள்ள வாலிபப் பெண்களிடத்தில், அதே வயதுடைய வாலிபர்களிடத்துள்ள அதே போன்ற முக்கியப் பொறுப்பு கிளைத்தலைவருக்கு இருக்கிறது.

அமைப்பு சிறுமிகள் (12லிருந்து 17வரை) இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்கு மாறவும், தங்கள் பெற்றோரைக் கனம் பண்ணவும், பரிசுத்த ஆலய உடன்படிக்கைகளைச் செய்ய ஆயத்தப்படவும், தகுதியுள்ள மனைவிகளாகவும், தாய்மார்களாகவும், சேவை செய்யவும் வாலிபப் பெண்கள் அமைப்பு உதவுகிறது.

வாலிபப் பெண்கள் சுவிசேஷப் போதனைகளை, ஞாயிறு கூட்டங்களிலும், வார நிகழ்ச்சிகளிலும் பெறுகிறார்கள். கிளையில் தேவையான வாலிபப் பெண்கள் இருக்கிறார்கள் என கிளைத் தலைவர் தீர்மானிக்கும்போது, 12 வயதிலிருந்து 17 வரை உள்ள வாலிபப் பெண்கள் ஒத்தாசைச் சங்கத்திலிருந்து தனி-யாகச் சந்திக்கிறார்கள். அவர்களை பீஹைவ் (12-13 வயது), மியாமெய்ட் (14-15 வயது), லாறல் (16-17 வயது) வகுப்புகளாக, அவர் அமைக்கலாம். வகுப்புத் தலைவியாக ஒவ்வொரு வகுப்புக்கும் ஒரு தகுதியான வாலிபப் பெண்ணை அழைத்து அவர் பணியமர்த்திடலாம். வகுப்பில் போதுமான வாலிபப் பெண்கள் உள்ளபோது, கிளைத் தலைமையின் ஒரு ஆலோசகர், ஒவ்வொரு தலைவிக்கும் அதிகப்படியாக இரண்டு ஆலோசகர்களையும், ஒரு வகுப்புச் செயலாளரையும் அழைத்துப் பணி-யமர்த்தலாம்.

ஒவ்வொரு வாலிபப் பெண்ணின், இயேசு கிறிஸ்துவில் உள்ள விசுவாசத்தைப் பலப்படுத்தவும், மறுஸ்தாபிதம் செய்யப்பட்ட சுவிசேஷக் கொள்கைகளுடன் இசைந்து ஜீவிக்க அவளது புரிந்து கொள்ளுதலையும், ஒப்புக் கொடுத்தலையும் அதிகரிக்க, கிளைத் தலைவரின் வழிகாட்டுதலின்கீழ், வாலிபப் பெண்கள் தலைமை (வயது வந்தோர்) கிளைத் தலைமையுடனும், வாலிபப் பெண்கள் வகுப்புத் தலைமைகளுடனும் (யுவதிகள்) பணியாற்றுகின்றனர். ஞாயிறு சுவிசேஷ போதனையும் முழுமையான வார நிகழ்ச்சிகளும் இக்குறிக்கோள்களை அடைய உதவலாம்.

வாலிபப் பெண்கள் வகுப்புத் தலைமைகளும், ஆரோனின் ஆசாரியத்துவக் குழுத்தலைமைகளும், வாலிபப் பெண்கள் மற்றும் ஆரோனின் ஆசாரியத்துவத்தில் வயது வந்த தலைவர்களுடன் ஒத்துழைத்து, கிளைத்தலைவரின் மேற்பார்வையுடன், வாலிபப் பெண்களும் ஆரோனின் ஆசாரியத்துவமும் இணைந்து நிகழ்ச்சிகளைத் திட்டமிடலாம். ஒன்றிணைந்த நிகழ்ச்சிகள் அந்நியோன்யம் என்றழைக்கப்படுகின்றன.

## ஆரம்ப வகுப்பு



குழந்தைகளுக்கு (3 முதல் 17 வயது) இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கற்பித்து, அதன்படி ஜீவிக்கக் கற்றுக்கொள்ள ஆரம்ப வகுப்பு உதவுகிறது. ஆரம்ப வகுப்பில் குழந்தைகள் வரவேற்கப்படுவதையும், இரட்சகரின் அன்பையும், சுவிசேஷம் கொண்டு வருகிற மகிழ்ச்சியையும் உணர்கிறார்கள்.

ஆரம்ப வகுப்பின் மையக்கருத்தாவது "உங்கள் பிள்ளைகளனைவரும் கர்த்தரைக் குறித்து போதிக்கப்படுவார்களாக; உங்கள் பிள்ளைகளின் சமாதானம் பெரிதாயிருக்கும்" (3நெபி22:13). வேதங்களைப் படிக்கவும், ஜெபிக்கவும், இரட்சகரின் உதாரணத்தைப் பின்பற்றவும், குழந்தைகளை ஊக்குவித்து, சபையின் ஊழியத்தை நிறைவேற்ற ஆசாரியத்துவத் தலைவர்களுக்கு ஆரம்ப வகுப்பு உதவுகிறது. ஆரம்ப வகுப்பின் நோக்கங்களாவன:

- அவர்கள் தேவனின் குழந்தைகள் எனவும், பரலோக பிதாவும் இயேசு கிறிஸ்துவும் அவர்களை நேசிக்கிறார்கள் எனவும் போதிப்பது.
- பரலோக பிதாவையும் இயேசு கிறிஸ்துவையும் நேசிக்கக் கற்றுக்கொள்ள குழந்தைகளுக்கு உதவுதல்.
- குழந்தைகள் ஞானஸ்நானம் பெறவும், பரிசுத்த ஆவியானவரைப் பெறவும், தங்கள் ஞானஸ்நான உடன்படிக்கைகளையும் வாக்குத்தத்தங்களையும் கைக்கொள்ளவும் உதவுதல்.
- குழந்தைகள் சுவிசேஷத் திட்டத்தைப் புரிந்து கொள்ளுதலில் வளரவும், சுவிசேஷக் கொள்கைகளின்படி வாழ அவர்களுக்கு சந்தர்ப்பங்களை வழங்கி உதவுதல்.
- சிறுவர்கள் ஆசாரியத்துவத்தைப் பெற ஆயத்தப்படவும், பிறரை ஆசீர்வதித்து சேவை செய்ய ஆசாரியத்துவத்தைப் பயன்படுத்த தகுதியுள்ளவர்களாகவும் ஆக உதவுதல்.
- சிறுமிகள் நீதிமான்களாகிய வாலிபப் பெண்களாக ஆயத்தப்படவும், ஆசாரியத்துவம், ஆலயம், ஆகியவற்றின் ஆசீர்வாதங்களைப் புரிந்து கொண்டு, பிறருக்கு சேவை செய்ய உதவுதல்.

பெற்றோர் தங்கள் பிள்ளைகளுக்கு இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கற்பிக்க, ஆவியால் நடத்தப்பட்டு அவரை நாடும் போது, ஆசாரியத்துவ மற்றும் ஆரம்ப வகுப்புத் தலைவர்கள் உதவுகிறார்கள். ஆரம்ப வகுப்பிலுள்ள ஒவ்வொரு குழந்தையும் விசேஷமாக சுவிசேஷ ஜீவியத்தில் பலமிக்க ஆதரவு குறைவாக இருக்கின்ற வீடுகளிலிருந்து வரும் குழந்தைகளுக்கு பராமரிக்கின்ற ஆசிரியர்களாலும், தலைவர்களாலும் நேசிக்கப்பட வேண்டியது அவசியமாயிருக்கிறது.

குழந்தைகளின் எண்ணிக்கை போதுமானதாகும்போது, அவர்கள் ஞாயிறு பள்ளி, ஒத்தாசைச் சங்கம், மற்றும் வாலிபப் பெண்கள் வகுப்பு நேரங்களில் வகுப்பு

போதனைக்காகவும், பகிர்ந்து கொள்ளும் நேரத்துக்காகவும், பெண்களிடமிருந்தும், வாலிபப் பெண்களிடமிருந்தும் தனியாகச் சந்திக்கிறார்கள். ஞாயிறு தவிர இன்னொரு நாளில் ஆரம்ப வகுப்பு வயதுக் குழந்தைகளுக்காக, கிளைகள் அவ்வப்போது நிகழ்ச்சிகள் நடத்தலாம். பகிர்ந்து கொள்ளும் நேரம், வார நாள் நிகழ்ச்சிகள் பற்றிய அதிகப்படியான அறிவுரைகள் ஆசாரியத்துவத் தலைவர்கள் மூலம் கிடைக்கின்றன.

## ஞாயிறு பள்ளி

ஞாயிறு கூட்டங்கள் ஆவிக்குரிய பலமும் ஆலோசனைகளும் கொடுத்து, சுவிசேஷக் கொள்கைகளின்படி வாழவும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் கற்றுக் கொள்ளவும், அங்கத்தினருக்கும், 12 வயது மற்றும் அதிகமானோருக்கும் ஞாயிறு பள்ளி உதவுகிறது. ஞாயிறு பள்ளி ஆசிரியர்கள் சபையாரை ஊக்குவிப்பதாவது:

- வேதங்களைப் படிக்க.
- கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய.
- தேவையான நியமங்களைப் பெற்று, சுவிசேஷத்தோடு சம்பந்தப்பட்ட உடன்படிக்கைகளைக் கைக்கொள்ள உதவவும்.

ஞாயிறு பள்ளித் தலைமை ஞாயிறு பள்ளியை கண்காணிக்கிறது. தலைவர் திறமையான ஆசிரியர்களை கிளைத் தலைவருக்கு பரிந்துரை செய்கிறார். ஞாயிறு பள்ளி வகுப்புக்களைக் கற்பிக்க கிளைத் தலைமை ஆசிரியர்களை அழைத்து பணியமர்த்துகிறது. எண்ணிக்கை குறைவாக இருக்கும்போது இளைஞரும் வயது வந்தோரும் ஒன்றாகச் சந்திக்கிறார்கள், ஆனால் அவ்வாறு செய்ய எண்ணிக்கை நியாயப்படுத்தும்போது, அவர்கள் தனியாக வகுப்பு போதனைகளுக்காகச் சந்திக்கலாம்.



# பாடத்திட்டமும் ஆசிரியர் வளர்ச்சியும்




## பாடத்திட்டம்

ஆசாரியத்துவக்குழு மற்றும் துணைக்குழுப் பாடத்திட்ட சாதனங்களை சபை வழங்குகிறது. ஒவ்வொரு வருடமும் பயன்படுத்தப்பட வேண்டியவைபற்றி பகுதித் தலைமை அறிவுரை கொடுக்கும். சபை விநியோக அல்லது சேவை மையத்திலிருந்து, பொருட்களின் வருடாந்தர விநியோகத்துடன் அறிவுரைகள் கொடுக்கப்படுகின்றன. ஆசாரியத்துவத் தலைவர்களின் மூலம் கிடைக்கின்ற *பாடத்திட்டம் பற்றிய ஆசாரியத்துவ, துணைக்குழுத் தலைவர்களுக்கான அறிவுரைகளின் பிரசுரம்* (36363), சபைப் பாடத்திட்டத்தின் மேலோட்டப் பார்வையை அடக்கியுள்ளது. தலைவர்களும், ஆசிரியர்களும், அங்கீகரிக்கப்பட்ட சபையின் போதனைச் சாதனங்களை மட்டுமே பயன்படுத்த ஊக்குவிக்கப்படுகிறார்கள். வியாபார ரீதியானப் பொருட்களைத் தவிர்க்க வேண்டும்.

*பிரதான தலைமையின் செய்தி, விசாரிப்புப் போதகச் செய்தி மற்றும் லியஹோனாவில்* உள்ள ஆதாரங்கள், பாடத்திட்ட கையேட்டின் பாடங்களுக்கு வளமூட்டவும், மேம்படுத்தவும் கருத்துக்களைத் தருகின்றன. இந்தச் சாதனங்கள் சபையின் சொந்த இணைய தளம் www.lds.org-லிருந்து மின்னணு வடிவத்திலும், அச்சிடப்பட்டும் கிடைக்கின்றன. *லியஹோனா* கிடைக்கின்ற இடங்களில் கிளையிலுள்ள ஒவ்வொரு குடும்பமும் சந்தா செலுத்த வேண்டும்.

## ஆசிரியர் முன்னேற்றம்

பெற்றோரும், தலைவர்களும், ஆசிரியர்களும், இயேசு கிறிஸ்துவின் சுவிசேஷத்தைப் போதிக்கின்ற பரிசுத்தப் பொறுப்பைப் பெற்றுள்ளனர். அவர்களது முயற்சியினால் அன்றாட ஜீவியத்தில் சுவிசேஷ சத்தியங்களை எவ்வாறு பிரயோகிக்கலாம் என பிறர் கற்றுக் கொள்ள முடியும். கர்த்தர் சொன்னார்: “இராஜ்யத்தின் கோட்பாடுகளை உங்களுக்குள்ளே போதிக்க வேண்டும் என நான் ஒரு கட்டளை கொடுக்கிறேன். கருத்தாய்

போதியுங்கள். எனது கிருபை உங்கள் மேல் வரும்” (கோ.உ. 88:77-78).

கிளையில் போதிக்கும் தரத்துக்கு கிளைத்தலைமை பொறுப்பாகிறது. கிளையில் தேவையான எண்ணிக்கை உள்ளபோது, ஒரு சகோதரனையோ சகோதரியையோ கிளையின் ஆசிரியர் முன்னேற்ற ஒருங்கிணைப்பாளராகப் பணியாற்ற கிளைத்தலைமை அழைக்கிறது.

கற்பித்தல் குறித்த அதிகத் தகவல்களுக்கும் ஆசிரியர் முன்னேற்றத்துக்கும் *கற்பிக்கும் வழிகாட்டிப் புத்தகம்* பார்க்கவும்.



# தலைமை



## இரட்சகரின் உதாரணம்

தங்கள் குடும்பங்களிலும் சபையிலும், தலைவர்களாக அங்கத்தினர் பின்பற்ற, நமது இரட்சகராகிய இயேசு கிறிஸ்து ஒரு பூரண எடுத்துக்காட்டை ஏற்படுத்தியுள்ளார். அவர் தன் பிதாவையும் நேசித்தார்; தான் ஊழியம் செய்த ஜனங்களையும் நேசித்தார். தாழ்மையின் நிலையிலிருப்போரைத் தூக்கிவிட்டும், அதைரியப்பட்டோருக்கு நம்பிக்கையூட்டியும், பிறருக்கு ஊழியம் செய்ய அவர் ஜீவித்தார்.

இயேசு தன் அழைப்பை உணர்ந்து அதை நிறைவேற்றுவதில் ஜெபத்துடனும் கருத்துடனும் இருந்தார். அவர் எப்போதும் தன் பிதாவின் சித்தப்படியே செய்து, தனக்காக அல்லாமல் அவருக்கே மகிமையைக் கொடுத்தார். சிலுவையில் தன் ஜீவனைக் கொடுத்து, எல்லா ஜனங்களின் பாவங்களுக்காகவும் பாவநிவர்த்தி செய்து, மனுக்குலத்துக்காக எல்லாவற்றையும் அவர் தியாகம் செய்தார்.

இரட்சகரின் எடுத்துக்காட்டைத் தலைவர்கள் பின்பற்றும்போது, அவரது பணியைச் செய்ய, அவர்களின் திறமையை அவர் வளர்ப்பார். அவர்கள் செய்ய வேண்டியதையும், சொல்ல வேண்டியதையும் அவர்கள் அறிந்து கொள்ளுமாறு அவர் உணர்த்துவார் (கோ.உ. 100:6 பார்க்கவும்). தேவ இராஜ்யத்தைக் கட்டுவதில் தலைவர்கள் உண்மையாகவே அவரது உடன் ஊழியக்காரர்கள் ஆவார்கள். அவர்கள் வேதங்களின் மாணவர்களாகி, கோட்பாடுகளையும் சுவிசேஷக் கொள்கைகளையும் கற்று, தாங்கள் ஊழியம் செய்வோருக்குக் கற்பிக்க முயலுவார்கள்.

## தலைவர்களின் குணாதிசயக் கூறுகள்

### விசுவாசம்

அவரது பூலோக ஊழியத்தின்போது, தன் சீஷர்கள் விசுவாசத்தைப் பிரயோகிக்க இரட்சகர் அறிவுரை கூறினார் (மத்தேயு 17:14-21; லூக்கா 8:22-25 பார்க்கவும்). இயேசு கிறிஸ்து நமது

இரட்சகர் மற்றும் மீட்பர் என சபையின் தலைவர்கள் விசுவாசம் கொள்ள வேண்டும். ஜெபத்தினாலும், வேதம் படிப்பதாலும், கீழ்ப்படிதலாலும், மனந்திரும்புவதாலும் அவர்கள் இந்த விசுவாசத்தை விருத்தி செய்கிறார்கள். விசுவாசத்தின் விதையை நாம் போஷித்தால் அது நமக்குள் வளர்ந்து, மிகவும் விலையேறப் பெற்றதும், சுவையானதுமான கனியைக் கொடுக்கும். (ஆல்மா 32:42 பார்க்கவும்).

## அன்பு

இரட்சகர் சொன்னார்: "நீங்கள் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள்; நான் உங்களில் அன்பாயிருந்தது போல நீங்களும் ஒருவரிலொருவர் அன்பாயிருங்கள் என்ற புதிதான கட்டளையை உங்களுக்குக் கொடுக்கிறேன். நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதனால் நீங்கள் என்னுடைய சீஷர்கள் என எல்லோரும் அறிந்து கொள்வார்கள்" (யோவான் 13:34-35). கர்த்தர் தங்களுக்குப் பொறுப்பளித்த ஜனங்களைத் தலைவர்கள் நேசிக்க வேண்டும். தலைவர்கள் ஜனங்களை நேசிக்கும்போது, அவர்களுக்கு சேவை செய்யவும், கற்பிக்கவும், அவர்களது இரட்சிப்புக்காக முயற்சிக்க உதவவும் வாஞ்சிப்பார்கள்.

உலகில் தலைவர்களை ஊழியர்களாக ஜனங்கள் நினைப்பதில்லை. ஆனால் இரட்சகர் தன் வார்த்தைகளாலும், எடுத்துக்காட்டாலும், தாங்கள் வழிநடத்துகின்ற ஜனங்களுக்கு தலைவர்கள் ஊழியம் செய்ய கற்பித்தார். அவர் பன்னிருவரிடம் சொன்னார்: "உங்களில் எவனாகிலும் முதன்மையானவனாக இருக்க விரும்பினால் அவன் உங்களுக்கு ஊழியக்காரனாயிருக்கக்கடவன்" (மத்தேயு 20:27). நாம் பிறருக்கு ஊழியம் செய்யும்போது, நாம் கர்த்தருக்கு ஊழியம் செய்கிறோம். (மத்தேயு 25:31-40; மோசியா 2:17 பார்க்கவும்).

## கீழ்ப்படிதல்

இயேசு கிறிஸ்து கீழ்ப்படிதலுக்கும், பரலோக பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக் கொடுத்தலுக்கும் ஒரு பரிபூரண உதாரணத்தை ஏற்படுத்தினார் (மத்தேயு 26:39; யோவான் 5:30). பிறருக்கு எடுத்துக்காட்டை ஏற்படுத்தும் பொருட்டும், பரிசுத்த ஆவியானவரின் வழிநடத்துதலைப் பெற்றுக் கொள்ள தகுதியடையுமாறும் தலைவர்கள் கர்த்தரின் கட்டளைகளுக்குக் கீழ்ப்படிய வேண்டும். கீழ்ப்படிதல் கர்த்தரிடத்தில் அன்பைக் குறிக்கிறது (யோவான் 14:15 பார்க்கவும்).

கர்த்தருடைய கட்டளைகள் சபைத் தலைவர்கள் மூலமாகவும், பரிசுத்த ஆவியின் உணர்த்துதல்களாலும், வேதங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கின்றன. தலைவர்கள் இந்தக் கட்டளைகளுக்குக் கீழ்ப்படியும்போது அவர்களது அழைப்புக்களை நிறைவேற்ற கர்த்தர் உதவுவார்.

## ஒற்றுமை

அவரது மகத்தான பரிந்து பேசுகிற ஜெபத்தில், அவரும் அவரது பிதாவும் ஒன்றாயிருப்பது போல், அவரை நம்புகிறவர்களும் ஒன்றாயிருக்க வேண்டும் என இரட்சகர் ஜெபித்தார். (யோவான் 17:20-23 பார்க்கவும்). சபையின் ஒவ்வொரு அமைப்பிலும், வெற்றிக்கு ஒற்றுமை இன்றியமையாதது. ஆசாரியத்துவ மற்றும் துணைக்குழுத் தலைவர்கள் தங்கள் ஆலோசகர்களைத் தவிர்த்து விட்டு சுயாதீனமாய்ப் பணியாற்றக் கூடாது. ஒருமித்து, ஒன்றாய் ஆலோசிக்கும்போது, தலைமைகள் அதிகம் அதிகமாய் சாதிக்க முடியும்.

## தியாகம்

ஒரு ஐஸ்வரியவானான வாலிபன், நித்திய ஜீவனைச் சுதந்தரித்துக் கொள்ள, அவன் என்ன செய்ய வேண்டும் என இரட்சகரிடம் கேட்டான். "கற்பனைகளைக் கைக்கொள்," எனக் கர்த்தர் அவனுக்கு சொன்னார். அந்த வாலிபன் தன் சிறுவயது முதலே கட்டளைகளைக் கைக்கொள்வதாகச் சொல்லி, பின்பு கேட்டான், "இன்னும் என்னிடத்தில் குறைவு என்ன?" இயேசு, அவனது இருதயத்தில் உள்ளதை அறிந்தவராய், அவனது உடமைகளை விற்று, தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு, அவரைப் பின்பற்றுமாறு சொன்னார். ஆனால் அந்த வாலிபனோ, "மிகுந்த

ஆஸ்தியுள்ளவனாயிருந்தபடியால், துக்கமடைந்தவனாய்ப் போய்விட்டான்.” (மத்தேயு 19:16-22 பார்க்கவும்).

இந்த சம்பவத்தில் அவரைப் பின்பற்றுவதில் எல்லாவற்றிலும் தியாகம் செய்ய தலைவர்கள் ஆயத்தமுடன் இருக்க வேண்டும் என கர்த்தர் போதிக்கிறார். அந்த ஐஸ்வர்யவானான வாலிபனைப் போலவே தங்கள் உடமைகளைத் தியாகம் செய்ய தலைவர்கள் அழைக்கப்படலாம்; அல்லது கர்த்தரின் பணியை முன்னுக்குத் தள்ள, தங்கள் நேரத்தையும், தாலந்துகளையும், சுய முயற்சிகளையும் தியாகம் செய்யத் தலைவர்கள் கேட்டுக் கொள்ளப்படலாம். தலைவர்கள் கர்த்தருக்காகவும் அவரது இராஜ்யத்துக்காகவும் தியாகம் செய்யும்போது, எல்லாவற்றிலும் அவர்களை ஆசீர்வதிக்க கர்த்தர் வாக்குத்தத்தம் செய்கிறார் (மத்தேயு 19:29; கோ.உ. 97:8-9 காண்க).

## தலைமைப் பணிகள்

### இலக்குகளை ஏற்படுத்துதல்

தங்கள் அழைப்புகளில், அவர்கள் என்ன செய்ய வேண்டும் என கர்த்தர் வாஞ்சிக்கிறார் என்பது முக்கியமானது என்பதை கர்த்தரிடம் ஜெபத்துடன் வழிநடத்தக் கேட்பதைத் தலைவர்கள் கற்றுக் கொள்ள வேண்டும். ஆவியானவர் வழிநடத்துதலுடன் இலக்குகளை ஏற்படுத்துதல், கர்த்தர் அவர்களுக்குக் கொடுத்த பணியைச் செய்ய உதவும்.

ஒரு இலக்கினை ஏற்படுத்தும்போது, அதை எவ்வாறு அடைவது என்பது பற்றி தலைவர்கள் திட்டமிடுவது அவசியமாகும். உதாரணமாக ஒரு சேகரத் தலைவர், சேகரத்தில் திருவிருந்துக் கூட்டங்களுக்கு வருபவர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க ஒரு இலக்கை ஏற்படுத்தலாம். திருவிருந்து கூட்டங்களுக்கு வர தங்களை ஒப்புக்கொடுக்க கிளையின் அங்கத்தினர்களை கிளைத் தலைவர்கள் அழைக்க, கேட்டுக் கொள்வது அவரது திட்டத்தில் அடங்கலாம்.

தங்கள் சுய இலக்குகளை ஏற்படுத்தவும் அடையவும், அங்கத்தினர்களை தலைவர்கள் ஊக்குவிக்கலாம். தலைவர்கள் தனிநபர்களுக்கு இலக்குகளை ஆலோசனை சொல்லலாம், ஆனால் அவர்கள் தங்கள் சொந்த இலக்குகளை ஏற்படுத்தி அவற்றை எட்ட திட்டமிட வேண்டும்.

### திட்டமிடுதலும் பொறுப்பளித்தலும்

கூட்டங்களையும், நிகழ்ச்சிகளையும், சேவைத் திட்டங்களையும், கர்த்தரின் பணியைச் செய்ய இலக்கையும், திட்டமிட, ஆசாரியத்துவ துணைக்குழுத் தலைவர்களுக்கு பின்வரும் முறைகள் உதவும்; மற்றும் அங்கத்தினர்களுடன் ஐக்கியம் கொள்ளவும், அங்கத்தினரல்லாதவர்களுடன் நட்பு கொள்ளவும் உதவ முடியும். வீட்டுப்போதகத்தையும், ஒத்தாசைச்சங்க விசாரிப்புப் போதகத்தையும், தலைவர்கள் ஒழுங்குபடுத்த இந்த முறைகள் உதவும். கிளைப் பொறுப்புகளில் பணியாற்ற அங்கத்தினர்களை அழைக்க உதவும்.

1. திட்டமிட்டு, ஒழுங்குபடுத்துங்கள். ஒரு சுவிசேஷ நோக்கம் பெறவே தலைவர்கள் எல்லா கூட்டங்களுக்கும், நிகழ்ச்சிகளுக்கும் இலக்குகளுக்கும் திட்டமிடுகின்றனர். இந்த திட்டங்களை உருவாக்க, தலைவர்கள் தங்கள் ஆலோசர்கள் போன்ற பிறரிடமும், தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ளவும், நிர்வாகம் செய்ய உதவவும் கேட்கலாம்.

2. ஜெபியுங்கள். திட்டங்கள் தீட்டி செயலாக்கும்போது, ஆவியானவரின் தூண்டுதல் மூலம் வழிநடத்துதல் பெற தலைவர்கள் ஜெபிக்கின்றனர். இந்தப் பணியில் உதவ, யாரை அழைப்பது என அறிய வழிநடத்துதலுக்காகவும் அவர்கள் ஜெபிக்கிறார்கள்.

3. பொறுப்பளியுங்கள். ஒரு நல்ல தலைவர் பிறரை உதவிக்கு அழைக்கிறார், ஏனெனில் எல்லாவற்றையும் தனியாகவே செய்ய முடியாது, கூடாது என அவர் அறிவார். அவர்களுக்கு அனுபவம் கொடுப்பதனால் தங்கள் திறமைகளை விரிவடையச் செய்ய பிறருக்கு உதவ அவர் பொறுப்பளிக்கிறார். அவர் அவர்களுக்கு விளக்கி திட்டமிடுகிறார்.

பின்பு அவர் இந்தப் பணியைப் பூர்த்தி செய்ய கடமைகளையும், ஆசீர்வாதங்களையும் விளக்கி, ஒவ்வொருவருக்கும் அவர் குறிப்பிட்ட பணிகளுக்குப் பொறுப்பளிக்கிறார் (பணியமர்த்துகிறார்).

4. உதவுங்கள், ஆதரியுங்கள். ஒரு தலைவர் திட்டமிட்டு, ஜெபித்து, பொறுப்பளித்த பின்பு, அவர் பொறுப்பளித்தவருக்கு ஆதரவளிக்கிறார். அவர்கள் என்ன அறிந்து கொள்ள வேண்டும் என்று கற்பித்து உதவ முன்வருகிறார்; ஆனால் அவர்களை செய்யுமாறு கேட்டுக் கொண்ட பணிகளை அவர் செய்வதில்லை. அவரது அன்பையும் நம்பிக்கையையும் தெரிவித்து, எப்பொழுதும் காரியங்களை அவர் வழியில் செய்வதை விட, அவர்களது சொந்தக் கருத்துகள் மற்றும் உணர்த்துதலையும் பயன்படுத்த ஊக்குவிக்கிறார். தேவைப்படும்பொழுது மட்டுமே அவர்கள் செய்வதை மறுபடி வழிகாட்டவோ அல்லது மாற்றவோ செய்கிறார்.

5. தொடர்ச்சி. ஒரு பணியைக் கொடுத்த பின்பு, ஒரு தலைவர் அவ்வப்போது முன்னேற்ற அறிக்கையைக் கேட்கிறார். ஒரு சாதாரண உரையாடலின்போதோ, ஒரு சந்திப்பின்போதோ, ஒரு தனிப்பட்ட பேட்டியின்போதோ அவர் அப்படிச் செய்யலாம். அறிக்கை கொடுக்கும்போது, தலைவர் அந்த நபருக்கு நன்றி தெரிவித்து, மனமார்ந்த பாராட்டைத் தெரிவித்து, ஊக்கத்தை அளிக்கிறார். ஒதுக்கப்பட்ட பணியை எவ்வாறு நல்லமுறையில் செய்யமுடியும் எனவும் கலந்துரையாடலாம்.

6. மதிப்பீடு செய்யுங்கள். ஒதுக்கப்பட்ட பணி முடிவடைந்த உடன் பணிக்கப்பட்ட ஒவ்வொருவரிடமும் தலைவர் அதை மதிப்பீடு செய்கிறார். அவர் நன்றி தெரிவித்து, செய்யப்பட்டிருப்பதன் மதிப்பைக் கலந்துரையாடி அவருக்கு இன்னொரு பொறுப்பளிக்கலாம்.

### தீர்மானங்களை ஆயத்தம் செய்தல்

ஒரு தீர்மானம் என்பது ஒரு கூட்டத்துக்கான திட்டம் ஆகும். அது ஜெபங்கள், பாடல்கள், பேச்சுகள், அறிவிப்புகள், பணிகள், அறிக்கைகள், பணியமர்த்தல்கள் ஆகியவற்றை அடக்கியிருக்கலாம். ஒரு எழுதப்பட்ட தீர்மானம் மிக முக்கிய காரியங்கள் கருத்தில் கொள்ளப்பட்டனவா என்பதை உறுதி செய்ய தலைவருக்கு உதவுகிறது. கூட்ட நேரம் ஞானமாகப் பயன்படுத்தப்பட்டதா என உறுதி செய்ய உதவுகிறது. இது கூட்டத்தை ஒழுங்கான முறையில் நடத்தவும் அவருக்கு உதவுகிறது.

வழக்கமாக தலைமை தாங்குபவர் அல்லது பொறுப்பானவர் தீர்மானத்தை ஆயத்தம் செய்கிறார். கூட்டத்தின் நோக்கத்தை நிறைவேற்ற தேவையான எல்லாவற்றையும் உள்ளடக்கியுள்ளதா என அவர் உறுதி செய்கிறார். தீர்மானத்தை ஆயத்தம் செய்பவர், ஒவ்வொரு தீர்மானமாகவும் எவ்வளவு நேரம் எடுத்துக் கொள்ள வேண்டும் எனவும் தீர்மானிக்கிறார். எல்லா இனங்களையும் விவாதிக்க மிகவும் குறைவான நேரமே கிடைத்தால், அவர் அடுத்த கூட்டத்தின் தீர்மானங்களில் சிலவற்றை வைக்கிறார்.

### கூட்டங்களை நடத்துதல்

கூட்டத்தை நடத்துபவர், கூட்டத்தின் தலைவராக இருக்கிறார். அவர் யார் ஜெபிப்பது, பேசுவது, இசை நடத்துவது, கூட்டத்தில் பிற

காரியங்களைச் செய்வது போன்றவர்களின் பெயர்களை அறிவிக்கிறார். கூட்டத்தை நடத்துபவர் பயபக்தியுடன், கர்த்தரின் ஆவியால் வழிநடத்தப்படுவது போல கூட்டத்தை நடத்த வேண்டும்.

கூட்டத்துக்குத் தலைமை தாங்குபவர், அவரது வழிகாட்டுதலுடன் வேறொருவரை நடத்தச் சொல்லலாம். உதாரணமாக ஒரு கிளைத் தலைவர், ஒரு திருவிருந்துக் கூட்டத்தை நடத்த தன் ஆலோசகர்களில் ஒருவரைக் கேட்கலாம், அல்லது ஒரு குழுத்தலைவர் தன் ஆலோசகர்களை ஒரு குழுக்கூட்டத்தை நடத்தக் கேட்கலாம். இதே கொள்கை துணைக்குழுக்களுக்கும் பொருந்தும்.

## ஆலோசனைக் குழுக்கள்



ஆலோசனைக் குழுக்களின் கொள்கையில் தன் இராஜ்யத்தை கர்த்தர் ஆளுகை செய்கிறார். கிளை ஆலோசனைக் குழுக்கூட்டம், ஆசாரியத்துவ செயற்குழு கூட்டம், ஆசாரியத்துவ மற்றும் துணைக்குழு தலைமைக் கூட்டங்கள் போன்ற ஆலோசனைக் குழுக்கூட்டங்களை நடத்துபவர்கள், (*கிளை வழிகாட்டி புத்தகம்* பார்க்கவும்) பின்வரும் இந்த முக்கிய கொள்கைகளைப் பிரயோகிக்க வேண்டும்:

- சுவிசேஷக் கோட்பாடுகளையும், கொள்கைகளையும் மையப்படுத்தவும், கற்பனையானவற்றை அல்ல.
- எப்போதும் இரகசியத் தகவல்களை பத்திரமாய் பாதுகாப்பாய் வைக்க நினைவு கூர்ந்து, தனி நபர்களையும், சுவிசேஷத்தில் அவர்களை எவ்வாறு பலப்படுத்துவது என்பதையும் மையப்படுத்துங்கள்.
- கேட்கப்பட வேண்டியவை எல்லாவற்றுக்கும் சந்தர்ப்பம் கொடுத்து, சுதந்திரமான வெளிப்படையான கருத்துக்களை ஆதரியுங்கள்.
- தலைமை ஏற்கும் தலைவர்களின் முடிவுகளை ஆதரிக்கவும், நிறைவேற்றவும் உதவுங்கள்.
- எல்லோரது தேவைகள் மற்றும் நலம் குறித்த கனிவான அக்கறை மற்றும் அன்புடன் வழிநடத்துங்கள்.

## இரகசியங்களைப் பாதுகாத்தல்

முறையான பேட்டியின்போதோ, அசாதாரண உரையாடலின்போதோ வெளிவருகின்ற, இரகசியத் தகவல்களை யாருக்கும் தலைவர்கள் வெளியிடக்கூடாது. பேட்டிகள், அறிக்கையிடுதல்கள் விளைவாக வரும் தகவல்கள் மற்றும் ஒருவர் கொடுக்கின்ற தசமபாகம், நன்கொடைகள் பற்றிய தொகை ஆகியவை முழுவதும் இரகசியமாக வைக்கப்பட வேண்டும். ஆலோசகர்கள், துணைவர்கள், உள்ளிட்ட யாருடனும், குறிப்பிட்ட நபர் அனுமதியளித்தாலொழிய, ஒரு தலைவர் விவாதிக்கக்கூடாது. இரகசியங்களை கண்டிப்பாக இரகசியமாக காப்பதில் கவனமற்ற தலைவர், தான் சேவை புரிபவர்களின் சாட்சியையும் விசுவாசத்தையும் பலமிழக்கச் செய்து, தன்மீது அவர்களது நம்பிக்கையையும், விசுவாசத்தையும் குறைவடையச் செய்கிறார்.

# சபைப் பொருட்களைப் பெறுதலும் குடும்ப வரலாற்றுத் தகவல்களைக் கண்டறிதலும்

வேதங்கள், பாடத்திட்டங்கள், சபை இதழ்கள், ஆடைகள், ஆலயத் துணிகள் போன்ற சபைப் பொருட்களை உள்ளூர் தலைவர்கள் மற்றும் பிற சபையார், சபையின் வினியோக மையத்திலிருந்தும், அல்லது சேவை மையத்திலிருந்தும், சால்ட் லேக் வினியோக மையத்திலிருந்தும் அல்லது www.lds.org. ல் உள்ள சபையின் அதிகாரபூர்வ இணைய தளத்தின் மூலமும் பெறலாம்.

www.familysearch.org ல் உள்ள சபையின் குடும்ப வரலாற்று இணைய தளத்தில் குடும்ப வரலாற்றுப்பணி குறித்த தகவல்கள் கிடைக்கின்றன.

பிற்காலப்
பரிசுத்தவான்களின்
# இயேசு கிறிஸ்து
சபை

TAMIL
4 02311 78418 9
31178 418